# ஓ.எம்.ஆரில் மெட்ரோ ரயில்

## சோழிங்கநல்லூரில் மண் பரிசோதனை

சென்னை, ஜூன் 28–

மெட்ரோ ரயில் திட்டத்திற்காக, அடையாறு, துரைப்பாக்கம் பகுதியில், மண் பரிசோதனை முடிந்ததை தொடர்ந்து, சோழிங்கநல்லூர் – சிறுசேரி இடையே, மண் பரிசோதனை துவங்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில், 2வது திட்ட பணிக்காக, 85 ஆயிரம் கோடி ரூபாயில், மூன்று வழித்தடங்களில், 107.55 கி.மீ., துாரத்தில் பாதை அமைக்கப்பட உள்ளன.

மாதவரம் – சிறுசேரி சிப்காட் இடையே, 45.81 கி.மீ., துாரத்தில் ஒரு பாதையும்; மாதவரம் – சோழிங்கநல்லுார் இடையே, 44.62 கி.மீ., துாரத்தில் மற்றொரு பாதையும்; கோயம்பேடு – கலங்கரை விளக்கம் இடையே, 17.12 கி.மீ., துாரத்தில், மூன்றாவது பாதையும் அமைக்கப்பட உள்ளன.

இந்த பாதைகளில், 3,050 அடி இடைவெளியில், 116 நிலையங்கள் கட்டப்பட உள்ளன. இத்திட்டத்திற்கு தேவையான, நிலம் கையகப்படுத்தும் பணிகள், வேகமாக நடைபெற்று வருகின்றன.



■ மெட்ரோ ரயில் திட்டத்திற்கான மண் பரிசோதனை பணி நடந்தது. இடம்: சோழிங்கநல்லுார்.

மாதவரம் – சிறுசேரி சிப்காட் பாதைக்கு, ஓ.எம்.ஆர்., சாலையில், 20 அடி ஆழத்தில், மண் எடுத்து பரிசோதிக்கும் பணி, ஐந்து மாதத்திற்கு முன் துவங்கியது.

அடையாறு, துரைப்பாக்கம், காரப்பாக்கம் பகுதிகளில், ரயில் பாதை மற்றும் நிலையங்கள் அமையும் இடங்களில், சாலை ஓரம் மற்றும் மைய பகுதியில் இருந்து, மண் எடுக்கப்பட்டது.

அடுத்தகட்டமாக, சோழிங்கநல்லுாரில் இருந்து, சிறுசேரி வரை, மண் பரிசோதனை பணி துவங்கப்பட்டுள்ளது.

ஓ.எம்.ஆர்., வாகன நெரிசல் அதிகமுள்ள சாலையானதால், போக்குவரத்து போலீசார் அனுமதிக்கு பின், சாலை மைய பகுதியில், மண் பரிசோதனை நடக்கிறது.

மற்றொரு பக்கம், இடம் கையகப்படுத்த வேண்டிய இடங்கள், நிர்ணயம் செய்யும் பணியும் நடக்கிறது.